**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 28/2013**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 30.10.2025 | | |
| பெயர்: | சட்டையப்பன் (PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | கிருஷ்ணமூர்த்தி |
| கிராமம்: | நெய்தவாசல் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 51/2025 |

**<u>5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 30.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.25)**

1. நான் இந்த வழக்கை 1932ம் வருடம் எனது பாட்டி ராஜம்மாள் வாங்கிய கிரய ஆவணத்தின் அடிப்படையில் நடத்துகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு 1998ம் வருடம் மேற்படி சொத்து பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்றது. எனது தகப்பனார் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தந்தை பெயரிலுள்ள பட்டா என்றால் சரிதான், அந்த ஆவணம் **வா.சா.ஆ.12** ஆகும்.

2. வா.சா.ஆ.12 என்பது பாகப்பிரிவினை படி ஏற்பட்ட பட்டா ஆகும். அதில் எனது தந்தைக்கு 3 ஏர்ஸ் நிலம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். வா.சா.ஆ.12 பட்டாவின் எண் 248 என்றால் சரிதான். மேற்படி பட்டாவை குறித்து எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். எனக்கு பட்டாப்படி 7 ½ செண்ட் தான் கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல, ஆனால் பாகப்பிரிவினை படி 10 செண்ட் ஒதுக்கப்பட்டது.

3. பாகப்பிரிவினை படியோ, கிரயப்பத்திர படியோ எனக்கு 10 செண்ட் இடம் கிடையாது, 7 ½ செண்ட் இடம் மட்டும் தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.11 ஆவணங்கள் கண்ணப்பன், அவரது தகப்பனார் சிவப்பிரகாசம் மற்றும் அவரது தகப்பனார் மாரிமுத்து அவர்களுக்குள் ஏற்பட்ட சொத்து சம்மந்தமான ஆவணங்கள் என்றால் சரிதான். எனது பாட்டி ராஜம்மாளுக்கு கிரயம் செய்து கொடுத்தவர் ரங்கசாமி மகன் சுப்ரமணிய பத்தர் என்றால் சரிதான் (வா.சா.ஆ.3).

4. வா.சா.ஆ.3 ஆவணத்திற்கும் வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.11 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாதவை என்றால் சம்மந்தம் இருப்பதால்தான் தாக்கல் செய்துள்ளேன். நான் கேட்கிற பரிகாரமான சிவப்பிரகாசம் பெயரில் கொடுத்த பட்டா செல்லாது என்பது எத்தனை வருடம் கழித்து பரிகாரம் கேட்கிறேன் என்றால் 7 வருடம் கழித்து கேட்கிறேன்.

5. 1987ம் வருடத்திலேயே சிவப்பிரகாசம் பெயரில் பட்டா உள்ளது, அந்த ஆவணம் (பி.வா.சா.ஆ.5). ஆனால் நான் 2013ல் தான் பட்டாவை பொறுத்து செல்லாது என்று நான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் பரிகாரத்தில் கோரியவாறு பிரதிவாதி ஆக்கிரமிக்கவில்லை என்ற காரணத்தால் எனக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.53)**